**வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனியின் - 2017/2018**

-------------------------------------------

வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனியின் 2018 மார்ச் 31 திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கிய கணக்கீட்டு கொள்கைகளுடன் கூடிய 2018 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வினை அடிப்படையாகக் கொண்டு இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக ஒரு அபிப்பிராயத்தினை வெளியிடுவது எனது பொறுப்பாகும். என்னால் அதி உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) நேரொத்ததான இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நெறிமுறைகளின் தேவைப்பாடுகளுக்கு நான் இணங்கி நடக்கிறேன் என்பதற்கும் நிதிக்கூற்றுக்கள் போதியவில் பிழையான கூற்றுக்களிலிருந்து விடுபட்டது என்பது தொடர்பாகவும் நியாயமான உறுதிப்படுத்தலினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ப்படுகின்றது என்பதனை இந்நியமம் எதிர்பார்க்கின்றது.

நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற பெறுமதிகள் மற்றும் வெளிப்படுத்தல்கள் தொடர்பான கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்ளும் வகையிலான நடைமுறைகளை அமுல்ப்படுத்துதல் கணக்காய்வால் உள்ளடக்கப்படுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகளானது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான கூற்றிக்களிலிருந்தான ஆபத்துக்களை மதிப்பீடு செய்வதனையும் உள்ளடக்கிய கணக்காய்வாளரின் தீர்ப்பினை அடிப்படையாகக் கொண்டதாகும். அந்த ஆபத்துக்களை மதிப்பீடு செய்யும் போது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான வகையில் கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு மற்றும் நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்குரியதான உள்ளக கட்டுப்பாட்டினை கணக்காய்வாளர் கவனத்திற்கு எடுத்துக்கொள்கின்ற போதிலும் கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக ஒரு அபிப்பிராயத்தினை வெளியிடுவதனை கவனத்திற்கு எடுத்துக் கொள்ளவில்லை. முகாமைத்துவதினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை மற்றும் பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மையை மதிப்பீடு செய்வதனை போல் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் தொடர்பாக மதிப்பீடு செய்வதும் கணக்காய்வில் உள்ளடக்கப்படவில்லை.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதனை முன்னிட்டு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வு சான்றுகள் போதியளவானதும் பொருத்தமானதும் என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கையின் 2.2 பந்தியில் குறிப்பிட்டுள்ள விடங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ் அறிக்கையின் 2.2 பந்தியில் குறிப்பிட்டுள்ள விடங்களிலான தாக்கம் காரணமாக, கணக்காய்வு அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியுமான அடிப்படையை பெற்றுக் கொள்ள பொறுத்தமான பொருண்மையான நல்ல கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. அதன் பிரகாரம் இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை வெளிப்படுத்தவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 பிரகாரம் காணி மற்றும் கட்டிட கிரயம் நிதிக்கூற்றுக்களில் தனித் தனியாக இனங்காண வேண்டிய போதும் கம்பனியின் ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் காணப்படும் காணி மற்றும் கட்டிட கிரயம் ரூபா 132,274,693 தொகை தனித் தனியாக இனங்காணப்பட்டு இருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 01 இன் 32 பந்தி பிரகாரம் கணக்கீட்டு நியமத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருந்தால் அன்றி, எப்போதும் வருமானம் மற்றும் செலவுகளும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களும் ஒன்றிற்று ஒன்று பதிலீடு செய்யப்படக் கூடாத போதும், கம்பனியினால் மீளாய்வாண்டில் ரூபா 43,153,550 ஆன சொத்துக்கள் ரூபா 10,151,947 ஆன பொறுப்புக்களுடன் பதிலீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 பிரகாரம் கம்பனியினால் 2018 மார்ச் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்காக வருமான வரி செலவினம் கணக்கிடல் மற்றும் பிற்போடப்பட்ட வரி கணக்கிடல் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

கம்பனியின் மோடார் வண்டிகளிற்காக பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு ரூபா 2,192,232 தொகை மற்றும் கணனிகளிற்காக பெறுமானத் தேய்வு ஒதுக்கீடு ரூபா 18,882 தொகை, கிரயப் பெறுமதியை விஞ்சி கணக்கிட்டுள்ள காரணத்தால் வருடாந்த இலாபம் ரூபா 2,211,114 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 2.2.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இல்லாமை

ரூபா 775,150 தொகையான 01 வருமானக் கணக்கு மீதியும், ரூபா 2,143,837 தொகையான 06 செலவின கணக்கு மீதிகளும், ரூபா 484,423,303 ஆன ஆதன பொறி மற்றும் உபகரணங்கள், ரூபா 37,428,597 ஆன நடைமுறை வேலை மூலதனம், ரூபா (1,967,061) ஆன நீண்ட கால முதலீடு, ரூபா 120,820,606 ஆன இறுதி இருப்பு, ரூபா 105,550,749 ஆன வியாபார பெறவேண்டியவைகள், ரூபா 518,760,175 ஆன ஏனைய பெற வேண்டியவைகள், ரூபா 29,263,264 ஆன பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள், ரூபா 159,958,713 ஆன வட்டியுடன் கூடிய கடன், ரூபா 134,039,935 ஆன வியாபார செலுத்த வேண்டியவைகள், ரூபா 1,298,579,271 ஆன ஏனைய செலுத்த வேண்டியவைகள், ரூபா 13,153,268 ஆன வங்கி மேலதிக பற்று, ரூபா 5,725,351 ஆன நியதிச் சட்ட கொடுப்பனவாக கூட்டுத் தொகை ரூபா 2,908,655,158 ஆன கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் 19 கணக்கு மீதிகளை உறுதி

செய்து கொள்ள தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முகாமைத்துவத்திற்கு இயலாதிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் நிதி செயற்பாட்டு விளைவுகள் ரூபா 7,135,792 ஆன இலாபமானதுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 46,888,937 ஆனது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 54,024,729 ஆன வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வளர்ச்சிக்கு நிர்வாக செலவுகள் ரூபா 87,017,191 இனால் குறைவடைந்தமை முக்கிய காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மைகள்

(அ) 2007 இன் 07 இலக்க கம்பனிச் சட்டத்தின 148 பிரிவின் பிரகாரம் கம்பனியின் கொடுக்கல் வாங்கல்களை சரியாக அறிக்கையிடும் மற்றும் தெளிவுபடுத்தும் கணக்கு அறிக்கை மற்றும் துணை ஆவணங்களை வைத்திருக்க வேண்டிய போதும் கணக்குக் காலப் பகுதிக்குரிய கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் தொடர்பாக கணக்கு புத்தகங்கள் மற்றும் கணக்கீட்டு சான்றுகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள கம்பனியின் உரிய அதிகாரிகளினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2015 பெப்ரவரி 09 திகதியன்று உள்ளவாறான இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டியிருந்த நிலுவை மின் பட்டியலான ரூபா 483,997,075 தொகையை செலுத்தாததால் அத்திகதி முதல் வாலைச்சேனை கைத்தொழிற்சாலைக்கு மின்சாரம் வழங்குவதனை தற்காலிகமாக துண்டித்திருந்ததுடன் மின் வழங்கல் இல்லாததால் 2020 ஜுன் மாதம் வரை வாலைச்சேனை கைத்தொழிற்சாலையில் எவ்வித உற்பத்தி செயற்பாடுகளும் இடம்பெற்றிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2022 செப்டம்பர் 08 திகதிய, இலக்கம் EP/EE(COM)/CS/BulkSupply கொண்ட இலங்கை மின்சார சபையின் பிரதான முகாமையாளரின் கடிதத்தின் பிரகாரம் மற்றும் 2020 மார்ச் 26 திகதிய, இலக்கம் அப/20/0561/224/015 கொண்ட அமைச்சரவை தீர்மானம் மூலம், ரூபா 361,992,685 தொகையான தண்ட வட்டியை பதிவழித்த பின்னர் எஞ்சிய ரூபா 122,004,390 ஆன நிலுவை மின்சார தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்த திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் காலம் கடந்த பின்னர் வருகின்ற ஆறு மாதகாலத்தினுள் தவணைகளாக செலுத்தி முடிவுறுத்தும் நிபந்தனையின் கீழ் அங்கீகாரத்தை பெற்று, 2020 ஜுலை மாதத்தில் தொழிற்சாலையின் உற்பத்தி நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 ஒக்டோபர் 31 திகதியளவில் கடதாசி கம்பனியினால் நிலுவை மின் பட்டியலான ரூபா 122,004,390 பெறுமதியிலிருந்து ரூபா 10,000,000 தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன் ரூபா 112,004,390 ஆன பெறுமதி செலுத்த வேண்டி இருந்தது.

(இ) 2020 ஜுலை மாதம் முதல் கம்பனியின் பிரதான அலுவலகத்தின் நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 09 ஊழியர்களும், ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 12 ஊழியர்களும் மற்றும் நாட் சம்பள அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 02 ஊழியர்களுமாக 23 ஊழியர்கள் மற்றும் வாலைச்சேனை கைத்தொழிற்சாலையில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 06 ஊழியர்கள் மற்றுமநாட் சம்பள அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 120 ஊழியர்களுமாக 126 பேர்கள் உள்ளடங்களாக மொத்த ஊழியர் எண்ணிக்கை 149 ஆனதுடன் இந்த ஆளணியினரிற்காக இதுவரை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றிருக்கவில்லை.

(ஈ) வாலைச்சேனை கைத்தொழிற்சாலையில் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் போது பொது திறைசேரியின் பிணையுடன் கூடியதாக (Treasury guarantee) 2020 திசெம்பர் 09 திகதி ரூபா 40 மில்லியன் கடன் தொகையானது 06 மாதகால சலுகைக் காலத்தின் கீழ் 05 ஆண்டுகளில் 54 தவணைகளில் செலுத்தும் நிபந்தனை உள்ளடக்கப்பட்டு மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்டிருந்தது. மேலும், கம்பனியினால் 2021 மே மாதம் 17 திகதி மீண்டும் ஒரு முறை ரூபா 100 மில்லியன் கடன் தொகை வாலைச்சேனை கைத்தொழிற்சாலையின் தொழிற்படு மூலதன தேவைப்பாட்டிற்காக 05 ஆண்டுகளில் செலுத்தும் அடிப்படையில் மக்கள் வங்கியிலிருந்து பெறப்பட்டிருந்தது. இக் கடன் தொகை பொது திறைசேரியின் பிணையுடன் சந்தை வட்டி விகிதங்களின் கீழ் பெறப்பட்டுள்ளதுடன் வரிசை அமைச்சினான கைத்தொழில் அமைச்சின் எவ்வித அனுசரணையும் தேசிய கடதாசி கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை.

(உ) தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த கடதாசி உற்பத்தி இயந்திரம் (Paper Machine) மற்றும் அட்டை உற்பத்தி இயந்திரம் (Board Machine) ஆக முக்கிய 02 இயந்திரங்கள் காணப்பட்ட போது தற்போது அட்டை உற்பத்தி இயந்திரம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2020 ஆண்டில் மீண்டும் வாலைச்சேனை கடதாசி தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்து செயற்படுத்திச் செல்லும் போது அட்டை உற்பத்தி இயந்திரத்தின் செயலிழந்த மற்றும் இயந்திர ரீதியான வழுக்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் உரிய செயற்பாட்டிற்காக கடதாசி உற்பத்தி இயந்திரத்தின் பாகங்களை கலற்றி அட்டை உற்பத்தி இயந்திரத்திற்கு பொருத்துவது கம்பனியின் முகாமைத்துவம் பின்பற்றிய முறையாகும். அவ்வாறு கடதாசி உற்பத்தி இயந்திரத்திலிருந்து 08 முக்கிய உருப்படிகள் அட்டை உற்பத்தி இயந்திரத்திற்கு பொருத்தியுள்ளதுடன் அவற்றின் பெறுமதி ரூபா 34,433,059 ஆனது. அதன் பிரகாரம், கணக்காய்வு திகதிய 2024 சனவரி 22 திகதி வரையும் கடதாசி உற்பத்தி இயந்திரத்திலிருந்து எவ்வித பயன்பாட்டையும் பெறமுடியாத நிலைக்கு செயலிழந்து காணப்பட்டதால் கடதாசி அட்டை உற்பத்தி தடைப்பட்டிருந்தது.

(ஊ) 2011 திசெம்பர் 19 திகதிய இலக்கம் 1037 கொண்ட குத்தகை உடன்படிக்கை பிரகாரம் எம்பிலிபிடிய கைத்தொழிற்சாலையை மீண்டும் முதன் நிலைக்கும் மாற்றுவதற்கு மற்றும் மீண்டும் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 600 மில்லியன் பெறுமதிக்கு 30 ஆண்டு காலத்திற்காக இலக்கம் 561/3, எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05 இல் அமைந்துள்ள அரச வளங்கள் முகாமைத்துவ கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனி ஆகிய இரட்டை மற்றும் இலக்கம 03/43, வென்டநோர் எவனியு, மேற்கு பர்த், மேற்கு அவுஸ்திரேலியா வியாபார முகவரியின் வரையறுக்கப்பட்ட பர்த் இன்ஜியர் மற்றும் மெயின்டர்னஸ் (தனியார்) கம்பனிக்கிடையேயான உடன்படிக்கை பிரகாரம் இணங்கிய ரூபா 600 மில்லியன் பெறுமதியில் ரூபா 200 மில்லின் தொகை குத்தகைதாரரினால் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், குறித்த கம்பனியினால் சிறிய காலம் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன் பின்னர் எம்பிலிபிடிய கைத்தொழிற்சாலைக்கு சொந்தமான கடதாசி உற்பத்தி இயந்திரத்தை செலான் வங்கிக்கு ரூபா 418,483,037 பெறுமதிக்கு அடைவு வைத்து 2012 ஆண்டில் தொழிற்சாலையை விட்டுச் செல்ல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த அடைவை தீர்த்துக் கொள்ள இரண்டாம் குத்தகைதாரர் ரூபா 120 மில்லியன் தொகையை வங்கிக்கு செலுத்த நேரிட்டிருந்ததுடன் உரியவாறு குத்தகை தவணைகளை செலுத்தாததன் மீது அரச வளங்கள் மற்றும் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சினால் சட்டமா அதிபரின் அறிவுரை மீது குறித்த குத்தகை உடன்படிக்கையை 2014 செப்டம்பர் 25 திகதி இரத்துச் செய்திருந்த போதும 2011 திசெம்பர் 19 திகதி முதல் உடன்படிக்கை இரத்துச் செய்த காலமான 2014 செப்டம்பர் 25 வரையான மூன்று ஆண்டு காலப் பகுதிக்காக கிடைக்க வேண்டிய ரூபா 42 மில்லியனான குத்தகை வாடகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

அவ்வாறே உற்பத்தி இயந்திரத்தை செலான் வங்கிக்கு அடைவு வைப்பதற்காக தேசிய கடதாசி கம்பனியை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் உடன்படிக்கைக்கு உட்பட்ட தரப்பினர்களிடமிருந்து கம்பனிக்கு எவ்வித நட்டத்தையும் அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன் உடன்படிக்கைக்கு உட்பட்ட வரையறுக்கப்பட்ட பர்த் இன்ஜியர் மற்றும் மெயின்டர்னஸ் (தனியார்) கம்பனி உற்பத்தி நடவடிக்கைகளை நிறுத்திய காரணத்தால் உடன்படிக்கை மீறியது தொடர்பாக குத்தகை வழங்குனர் தரப்பினரால் எவ்வித சட்டரீதியான நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(எ) தேசிய கடதாசி கம்பனியின் எம்பிலிபிடிய கைத்தொழிற் 2022 மார்ச் 09 திகதிய குத்தகை உடன்படிக்கையின் கீழ் கேஎஸ்பீஏ எம்பிலிபிடிய கடதாசி தொழிற்சாலை (தனியார்) கம்பனிக்கு (KSPA Ambilipitiya Paper Mills private limited) ரூபா 260 மில்லியனான பெறுமதிக்கு 30 வருட காலத்திற்கு குத்தகை வழங்கப்பட்டுள்ளது. உடன்படிக்கை பிரகாரம் 18 மாதங்களினுள் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டியதுடன் அந்த கால எல்லையினுள் ரூபா 13,000,000 ஆன வருடாந்த குத்தகை வாடகை தவணையொன்றை குத்தகை பெறுனரினால் கம்பனிக்கு சொலுத்த வேண்டும். உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்த பின்னர் உடன்படிக்கை பிரகாரம் விற்பனை வருமானத்தின் மீது 3 சதவீதத்திற்கு சமமான பெறுமதியை வருடாந்த குத்தகை வாடகை தவணையாக செலுத்த வேண்டும். அதன் பிரகாரம் கேஎஸ்பீஏ எம்பிலிபிடிய கடதாசி கம்பனியினால் 2024 ஏப்ரல் 18 திகதி உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்த போதும் இந்த அறிக்கை திகதி வரையும் எவ்வித குத்தகை வாடகையும் கம்பனிக்கு கிடைத்திருக்கவில்லை.

## 5. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 ஜுன் 02 திகதிய மற்றும் இலக்கம் பீஈடி/12 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களிற்குள் வருடாந்த நிதிக்கூற்று மற்றும் வரைவு அறிக்கை கணக்காய்வாளர நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதும், வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசி கம்பனியின் 2017/2018 கணக்காயகாண்டிற்கு உரிய நிதிக்கூற்றுக்கள் 2023 நவம்பர் 02 திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.